அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக் கடிதம்:- 01/2016

எனது இல : EST-7/ OFTIM/07/1011

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ

அமைச்சு

சுதந்திர சதுக்கம்

கொழும்பு 07

2016.02.11

அமைச்சுக்களின் செயலாளர்கள்

மாகாணப் பிரதம செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள்

<u>அரச அலுவலர்களின் அலுவலக நேரங்கள் மற்றும் விடுமுறைகள்</u>

1992.01.25 ஆம் திகதிய 03/92 மற்றும் 1994.01.21 ஆம் திகதிய 06/94 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளின்பால் உங்களது கவனம் கோரப்படுகின்றது.

02. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 06/94 இன் ஏற்பாடுகளுக்கு இணங்க தாமதங்களுக்கு பதிலீடு செய்ய முடியாத சந்தர்ப்பங்களை மாதாந்தம் கணக்கிடல் வேண்டும். அதற்கேற்ப ஒவ்வோர் அலுவலரும் குறித்த மாதத்தினுள் பதிலீடு செய்யாத தாமதங்கள் தொடர்பாக இரண்டு சந்தர்ப்பங்கள் வரை அலுவலரின் விடுமுறைகளில் இருந்து குறைக்கப்படுவதில்லை என்பதோடு இரண்டு சந்தர்ப்பங்களை விட அதிகமாயின் பதிலீடு செய்யாத சகல தாமதங்களிற்கும் அலுவலரின் விடுமுறைகளில் இருந்து அரை நாள் (1/2) வீதம் குறைக்கப்படல் வேண்டும்.

03. இவ்விடயம் குறித்து இதற்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்கள் மற்றும் ஆலோசனைகளும் இத்தால் இரத்துச்செய்யப்படும்.

ஒப்பம்/. ஜே. தடல்லகே

செயலாளர்

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு